உ

கடவுள் துணை.

கொரட்டிச்

சண்முகர்பேரில் பதிகம்.

இவை

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியாரவர்கள்குமாரர்

நமசிவாய முதலியாரவர்களது

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

கடவுள் துணை.

கொரட்டிச்சண்முகப்பதிகம்.

காப்புவெண்பா

கொரட்டிப்பதிவாழுங் குமரனறுமுகன்மேல்
திரட்டிப்பாமாலை சூட்ட-கொரட்டிதனில்
ஆலயத்தில்கண்ணுள்ள ஐங்கரத்தான்பாதமலர்
சாலவணிகொள்வேன் றலை.

காரணங்கள் ஞானங்கள் நிலைகலங்காமலுன் கழலிணைநினைக்கவைப்பாய், காயத்தின்வலுமையது குன்றாமலுன்னையேகைகுவித்திடவுமருள்வாய், சரவணபவாவென்னுநாமமென்னாவினிற் றழாதிருக்கநினைவாய், தாமதமிராசமெனு மிருகுணங்களானவை சாராதிருக்கவைப்பாய், இருவினைகளொன்றேனுநலியாமலென்மனதை யேகாட்டத்தில்வைப்பாய், ஏழையேன்வேண்டுவதை இல்லையென்னாமலோங்குரக்ஷித்தருளுவாய், மரணவேதனையெனுமாமாயையணுகாமல் வந்தென்னை யஞ்சலென்பாய்-வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முக
க
நாதனே.

பன்னகபூஷணன் பெற்றமாகவே திருப்பாற்கடலின் மீதிலுறைவோன், பாவித்தமருகனே வேல்வைத்தகையனே பார்மீதினாயினேன்றன், உன்னையே தெய்வமென

நம்பியேயெப்போது முன்கழற்கன்புபுரிவேன், ஓமெனு மெழுத்திலேடுன்னுறெழுத்திலையு மோயாமலோதநினை வேன், அன்னைநீயப்பநீ யறிவாயெவைக்குமே யாதார மானபொருளே, ஆரேனுநினதடிமையாவரேயெப்போப து மவர்களைக்கார்க்கநினைவாய், வலனெஞ்சனேனையும்வா ழ்வித்ததுன்கடமை வந்தென்னையஞ்சலென்பாய், வான வர்சகாயனே ஞானகுருதேசிகாமாசில்சண்முகநாதனே.

எத்தனைபடிக்கினு முலாவுகினுநாளெலா முத்தேகநி லையற்றதென், றெண்ணிலும் பயனில்லைஎன்செய்குவே னுன் என்மனமொடுங்கவிலையே, சித்தெனுமிவ்வுடற்சட மெனவுமோதினுந் தேகத்தி லபிமானமே, சேர்ந்தென் னைமயக்குதுசோரதவண்ணநீ தீர்த்தென்னையாளவேண் டும், பித்தனைப்போலவே பிணிவந்தபோதுநான் பேதித் தன்மிகவுநன்றே, பேசாதவானந்த சுகவாரிதன்னிலே பேராதிருக்கவருள்வாய், மத்தமுடன்மதியமுங் கொன் றைபுமணிந்தசிவன் வாஞ்சையோடழித்தபுதல்வா, வா னவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முகநா தனே. ரு.

மடமையேதருகின்ற விடையசுகமதனிலே வாடியே கெட்டார்கணுனும்; வாடாதவண்ணமே யருளினுலல்ல வோ மனதினையடக்கலாகும், கடையனேன்விடையமே கருதிவாணுளைகழிக்காமலருள்புரிகுவாய் காமாதிதன்னி லேவெகுவாயிருக்காமற் கைவிடாதாண்டுகொள்வாய், ப

டைகொண்டசூரர்தங் குடல்கிண்டுவேலினைப் பற்றியிடு மதிசூரனே, பாவையர்களிருவர்பால் மகிழ்கின்றசீலனே பற்றினேனுன்னையென்றும், வடவாலிநிழறனி நால்வருக்குபதேசம் வைத்தவன்பெற்றபுதல்வா, வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முகநாதனே. ௪

சென்னிலக்கொட்டிதனில்வருகின்றபேயர்கள்வினை தீர்த்துநீவிடைகொடுப்பாய், தீராதநோய்களுக்கு தருமருந்ததனை தந்துநீவிடைகொடுப்பாய், மந்திரமெனும்பெரிய வாரெழுத்துண்மைநெறி மாசறக்கற்கவறியேன், மானிடப்பிறவிதனில் வந்தனுனெப்போதும்வணங்கினதுந்தானுமுண்டோ, சந்ததமுமுன்னன்பர் மலரிட்டுநின்னையே தாள்வாரப்பணிகின்றனர், தமியனே னவ்வண்ணஞ்சார்ந்திருந்தாலிந்த தட்டுதலும்வருவதுண்டோ, வந்தவினைதீரநீ யெண்ணினலக்கரும மாறுதிருப்ப துண்டோ, வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முகநாதனே. ரு

மின்னனையபொய்யுடலை மெய்யென்றுநம்பியே மமதையிலாழ்ந்திருந்தேன், மேலாந்தவத்தொழில்கள்பூணவறியாமலேயின்னமலைகின்றனேனுன், என்னுயிர்க்குயிராயிருக்குநின்றன்மைகளை எப்படியறிந்துகொள்வேன், இகமொடுபரத்தினிறு நீயன்றிவேறுமொரு ஈசனுமிருப்பதுண்டோ. பன்னுகவிவாணனுப் பாடவறியாவெனைப் பாடும்படிக்கருளுவாய், பார்மீதிலேநல்ல குருமுனி

க்கருளினைப் பார்த்தென்னை ரட்சைபுரிவாய், வன்னெஞ்சினெடுசூரன் மாலாய்மறைந்தாலு வனியிற்குத்திவீழ்த்தாய், வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில் சண்முகநாதனே. சு

தானெனுமாணவம் விடாதநற்கீரனைத் தாழ்வானசிறையில்வைத்தாய், தானவர்கள்வானவரை வைத்தசிறை மீட்டுமவர் தாழ்வினையகற்றிவிட்டாய், நானந்தயமபடர் காளகனேராம் ஞடோறுமாண்டுகொள்வாய், நானெனுமகந்தையது வாராமலேயுனது நாட்டத்திலேயமைப்பாய், தேனூறுகொன்றையுந் தும்பையுமணிந்தபர சிவனுக்குகந்தபுதல்வா, தெவிட்டாதவானந்தவாரதனிலென்னையே தேக்கிடவு மருள்செய்குவாய், மான்விழிஞரிருவர் பக்கத்திருந்துமொருவாதனையுமின்றிநின்றாய், வானவர் சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முகநாதனே. எ

ஐம்பொறியொடைம்புல னடக்கியுன தருள்நாடிலானந்தநிட்டைபெறலாம், ஐம்புலனடக்குதற் குன்னருளையன்றியோ ராதரவுமில்லைகண்டாய், பைம்பொன் மணிமாலைபுனை பாவைய கள்வலையிலே படாதிருக்கவேண்டும், பாவியுமாயென்னையுங்கீ பாலிப்பையோநினது பழவடியரோடுகூடி அம்புயாசனனுன்னை யறியாதுபேழைனுதலாற் சிறையிலிட்டாய், ஆதாரமாயுன்னை யண்டினோரைக்கார்க்க மக்கிராரமாயிநின்றாய், வம்புமலர்மாலையுங் கங்கையுமணிந்தசிவன் மாண்பாயளித்த புதல்வா,

வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முக நாதனே. அ

கன்னலின்சுவையெனக்கற்கண்டுபாகெனக் கண்டுனைப்பருகிலிந்த, காயத்தில்வந்துரவு கன்மாதவ நீங்குமென் காட்டிக்கொடுத்தாயிலை, யென்னையெப்பாள்வர்கள்யானேனுமொருவரை யிப்புவியில்யாவர்காண்பர், ஏழையேநின்னடிமை யாகினேன்கைவிடி னெங்கே பிழைப்பதெந்தோ, பொன்னையு மண்ணையும் பொய்மையாய்ப்பெண்ணையும் போகமாய்க்கண்டிராது, பூராயமாய்நின்னையண்டினே னவையினிப் போதுமனம்வாய்க்கவிலையோ, வன்னமயில்மீதிலே வருமுனதுகாட்சிபெற வைப்பையோவறிகிலேனே, வானவர்சகாயனே ஞானகுருதேசிகாமாசில்சண்முகநாதனே. கூ

இப்பிறவிநற்பிறவி யெங்ஙனெனி லுன்னையென்றிதயமாஞ்சிறையிலிட்டேன், யாவருனைவிடுவிப்பா ரையனேயென்னைவிட்டெவ்வாறு தப்பலாகும், அப்பனேயையனே யென்றனைப்பணியவும் வரமளித் தென்னையாள்வாய், ஆறெழுத்தோதியேஐம்புலனடக்கும்வழியார்வமொடுகாட்டவேண்டும், ஒப்புனக்கொருதெய்வ முண்டெனநினைந்திடிலோயாதபிறவிவருமே, ஓமெனுமெழுத்தினில் உண்மைதனை நாயினே னுள்ளத்துணரவைப்பாய், மைபுயற்கூந்தலார் வள்ளிதெய்வானையொடு மருவியேவாழுமுருகா, வானவர்சகாயனே ஞானகுருதேசிகா மாசில்சண்முகநாதனே. ம

விருத்தம்.

பூவலயமாகவே போகவறியேனுனைப்
பூவெடுத்துத் துதிக்கவறியேன்
காவென்றுவாழ்த்திடவு நாவிலறியேனிரு
கண்கண்மழை சோரவறியேன்
பாவலர்கள்போலவே பாடவறியேனெனைப்
பார்த்துநீ யாளவேண்டும்
தேவலோகத்தவர் பணியுநற்பாதனே
திருகொரட்டிப் பணிவாசனே.

துதி விருத்தம்.

சுரந்தநீர்வயல்களாலே சூழ்ந்ததோர் கொரட்டி மேவும், வரந்தரு காளத்தீசன் வளமையுள் ஞானம்பாளும், இரந்தவேரம்பனோடு வுடும்பனுங் கடம்பன்கந்தன், பெருந்தனமடைவார்தன்னைப் பெருமையில் வணங்குவோனே.

கொரட்டிச்சண்முகப்பதிகம்

முற்றிற்று.